# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.54/2022

## அ.சா.1 (LW1)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **கங்காதரன்** | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | **மணிவேல்** | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **10.02.2023** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வடக்குமாலப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஒசூரில் உள்ள TVS கம்பெனியில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன கருப்பையா என்னுடைய நண்பர். எதிரிகள் அனைவரையும் தெரியும். முத்தனம்பட்டி பிரிவில் உள்ள ஒயின்ஸ்சாப்பில் சிரன்ஞ்சீவி நின்று கொண்டுயிருந்தார் அவரிடம் மதுபானம் வாங்கிவரும்படி சொன்னோம். அவர் மதுபானங்களை வாங்கிவந்தார். அதற்கு பணம் அதிகமாகிவிட்டதால் கூடுதல் பணம் என்னிடம் சிரஞ்சீவி கேட்டார். கூடுதல் பணத்தை தரமுடியாது என்று சொல்லி நானும், கருப்பையாவும் தகராறு செய்தோம். நானும் கருப்பையாவும் மதுபானம் சாப்பிட்டுவிட்டு கோணார் ஓட்டலில் பார்சல் சாப்பாடு வாங்கபோனோம். அப்பொழுது சிரஞ்சீவியும், சந்தோஷ்சும் நின்று கொண்டியிருந்தனர். சந்தோஷ் கருப்பையாவின் நண்பர். சந்தோஷ்விற்கும் கருப்பையாவுக்கும் இரண்டு மாதத்திற்கு முன்பே முன் விரோதம் இருந்தது. கருப்பையா பிளபிங் வேலை செய்து வந்தார். அவரிடம் சந்தோஷ் முன்பணமாக பணம் பெற்றுகொண்டுயிருந்தார். அதனால் சந்தோஷ்விற்கும் கருப்பையாவிற்கும் முன் விரோதம் இருந்துவந்தது. அப்பொழுது கருப்பையா சந்தோஷ்விடம் ஏன் என்னிடம் பேசமாட்டிங்கிறாய் என்று கேட்டார் அப்பொழுது இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. அப்பொழுது நான் கருப்பையாவை அழைத்து சென்று விட்டேன். நானும் கருப்பையாவும், அச்சராஜகாய்பட்டி முணியப்பன் கோவில் வழியாக சென்று கொண்டியிருந்தோம் அப்பொழுது சந்தோஷ்சும், சிரஞ்சீவியும் முணியப்பன் கோவில் அருகில் மது அருந்தி கொண்டியிருந்தார்கள். நானும், கருப்பையாவும் சென்று கொண்டியிருந்த போது சிரஞ்சீவி எங்களிடம் தகராறு செய்து கொண்டியிருந்தார். சிரஞ்சீவியை கருப்பையா பின் தலையில் கையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். மறுபடியும் கருப்பையாவை அழைத்துக்கொண்டு முத்தனப்பட்டிக்கு சென்றோம்.

மீண்டும் முத்தனப்பட்டியிலிருந்து கிழ்கிலிருந்து மேற்கு நோக்கி நானும், கருப்பையாவும் சென்றோம். அப்பொழுது எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டியிருந்தனர். அப்பொழுது சிரஞ்சீவி கருப்பையாவை தேவிடியாமவனே என்று திட்டினார். 2 மற்றும் 3 எதிரிகள் கருப்பையாவின் கையை பிடித்து கொண்டனர். அப்பொழுது சிரஞ்சீவி தான் மறைத்து வைத்திருந்து கத்தியை கொண்டு கருப்பையாவின் வலது தோல்பட்டியில் குத்தினார். இதோடு செத்துதொலைடா என்று கூறி காலில் எட்டி உதைத்தார். அதை பார்த்து நான் நின்று கொண்டியிருந்தேன். அப்பொழுது சிரஞ்சீவி அதே கத்தியில் எனது இடது முதுகில் குத்தினார். அதனால் எனக்கு காயம் ஏற்பட்டது. அந்த கத்தியுடன் எதிரிகள் மூவரம் இருசக்கர வாகனத்தில் கிழக்கு நோக்கி சென்றுவிட்டனார். நான் கருப்பையாவை பார்த்த பொழுது அவர் பேச்சுமூச்சு இல்லாமல் இருந்தார். அங்கு வந்த வழிப்போக்கு ஆட்டோவில் நானும், கருப்பையாவும் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவர் கருப்பையாவை பரிசோதனை செய்தார். வரும் வழியில் கருப்பையா இறந்துவிட்டதாக மருத்துவர் தெரிவித்தார். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கா நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான் சிகிச்சையில் இருந்த பொழுது போலீஸ்சார் என்னை விசாரணை செய்தார்கள். சம்பவம் சம்மந்தமாக புகார் கொடுத்தேன். அந்த புகார் அசாஆ.1 ஆகும். புகாரில் என் சகோதரி சாட்சி கையெப்பம் போட்டார். என்னிடம் காட்டப்படும் கத்தி சம்பவ சமயம் சிரஞ்சீவி என்னையும், கருப்பையாவையும் குத்த பயன்படுத்தப்பட்ட கத்தி. கத்தி சபொ.1. போஸ்சார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.02.11 14:04:54 +0530

Additional District Judge,

Dindigul.